1972 டிசம்பர் 15]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத் திட்டம் இப்போது மறு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. மேம்பாலத் திற்குப் பதிலாக சப்-வே போடலாம் என்று இப்போது சொல்லப் படுகிறது. சப்-வேக்கு 27 லட்சம் ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே போட்ட ஓவர்பிரிட்ஜ் கட்ட வேண்டுமானால் பல கட்டங் களில் நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு ஏற்படும் செலவு அதிகமாகிறது. அதைக் கணக்கில் கொண்டு தலைமைப் பொறியாளர் தற்போது ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்.

In view of this the Chief Engineer has now suggested a sub-way instead of an overbridge taking into account the following advantages :—

(i) It avoids costly acquisition of lands.

(ii) It passes through low lying areas and therefore is ideally suited for sub-way.

(iii) It requires no division during construction stage as the existing road is not affected by the construction of sub-way.

நவ்லாக் அரசாங்க விதைப்பண்ணை

* 159 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) இராணிப்பேட்டை அருகே உள்ள நவ்லாக் அரசாங்க விதைப்பண்ணைக்கு மேலும் நில ஆர்ஜிதம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் ? எப்போது செய்யப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) சுமார் 524.16 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு இயங்கா உடமைகளைக் கேட்டுப் பெறுதல்—கையகப்படுத்தல் சட்டத்தின்கீழ் கைப்பற்றும்படி ஆணையிடப்பட்டுள்ளது (Tamil Nadu Requisitioning and Acquisition of Immovable Property Act, 1956.) நில அளவை வேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன. மேற்படி வேலைகள் முடிவுற்றபின் நிலச் சொந்தக்காரர்களுக்கு நிலத்தைக் கைப்பற்றுதல் பற்றி அறிவிப்புகள் அலுவலர்களால் அனுப்பப்படும்.

திரு. கே. எ. வகாப் : இந்த நவ்லாக் பண்ணையை அபிவிருத்தி செய்வதற்காக பல ஆண்டுகளாக முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், அந்த நிலத்தை எடுப்பதற்கு சில தனிப்பட்டவர்கள் செய்கிற தகராறின் காரணமாக அது தாமதப்படுகிறது. ஆகவே, அரசு அதற்காக உடனடியாகத் தீவிர முயற்சி எடுத்து ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இந்த நவ்லாக் பண்ணை 1960-ம் ஆண்டிலிருந்து 76.39 ஏக்கர் பரப்பளவில் ஒரு பண்ணையாக இயங்கி வருகிறது. பண்ணையை விஸ்தரிக்கும் நோக்கத்துடன் லார்ட் மோகன் கிருஷ்ணதாஸுக்கும் மற்றும் நிலச் சொந்தக்காரர்களுக்கும் சொந்தமான 524.16 ஏக்கர் நிலம் அதிகப்படியாக தமிழ்நாடு 1956-ம் ஆண்டு இயங்கா உடமைகளைக் கேட்டுப் பெறுதல், கையகப்படுத்துதல் சட்டத்தின்கீழ் கேட்டுப்பெறுமாறு வேளாண்மை இயக்குநர் ஒரு திட்டம் தயார் செய்தார். கேட்டுப் பெறும் ஆணையை எதிர்த்து நில உடமைளார்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்குப் பதிவு செய்தனர். மேற்படி வழக்கை விசாரித்து நீதி மன்றம் சட்டத்தின்கீழ் கேட்டுப்பெறுவதற்குச் சரியான முறையில் நில உடைமையாளர்களுக்கு நோட்டீஸ் பிறப்பிக்கவில்லை என்ற காரணத்திற்காக கேட்டுப் பெறுதல் முறை செல்லாது என்று தீர்ப்புக் கூறியது. ஆகவே, நிலம் கேட்டுப்பெறுதல் குறித்து அரசு மீண்டும் பரிசிலனை செய்தது. இப்போது அரசு தீவிரமான திட்டம் தயாரித்து உடனடியாக எடுத்துக் கொள்வதற்கு முயற்சிகள் எடுத்து வருகிறது. அதற்கு வேண்டிய ரெவின்யூ அதிகாரிகளும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். துரிதமாக வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் கையகப்படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. செ. கந்தப்பன் தலைமை)

எல்லாபுரம் ஒன்றியத்திற்கு துணை விவசாயக் கிடங்கு

* 160 வினு.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள விவசாயக் கிடங்குக்கு இடவசதி போதாமையால், துணைக்கிடங்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?